உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 19.07.2026 • மலர் 04 • இதழ்: 200 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 19.07.2026 • Vol : 04 • Issue : 200 • Page : 4 • Rs. 5/-

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது

## இந்தியாவின் முதல் தனியார் ஆர்பிட்டல் ராக்கெட் 'விக்ரம்1'




சென்னை, ஜூலை 19

இந்திய விண்வெளி வரலாற்றில் புதிய மைல்கல்லாக, உள்நாட்டு தனியார் நிறுவனத்தால் முழுமையாக வடிவமைக்கப்பட்ட முதல் ஆர்பிட்டல் வகை ராக்கெட்டான 'விக்ரம் 1' நேற்று (ஜூலை 18) வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் முதலாவது ஏவுதளத் தில் இருந்து நேற்று இந்த வரலாற்று சிறப்புமிக்க முயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

நேற்று காலை 11.30 மணிக்கு விக்ரம்1 ராக்கெட் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டிருந்தநிலையில், மேகமூட்டம் சார்ந்த வானிலை காரணமாக 35 நிமிடம் தாமதமாக பகல் 12.05க்கு விண்ணில்ஏவப்பட்டது.

ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய விண்வெளித்துறையின் INSPACe அமைப்பின் தலைவர் பவன் கே கோயங்கா, "இந்தியாவின் தனியார் துறை சார்ந்த முதல் ஏவுதல் முயற்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது என்பதை முறைப்படி அறிவிப்பதில்நான்பெருமை கொள்கிறேன். விக்ரம்1 ராக்கெட் 453 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது எதிர்பார்ப்புகளையும் தாண்டிய ஒரு சாதனை" என தெரிவித்துள்ளார்.

ராக்கெட் ஏவப்படுவதை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் நேரில் பார்வையிட்டார். ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து அவர்,

இந்த திட்டத்தில் தொடர்புடைய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமான 'ஸ்கைரூட் ஏரோஸ் பேஸ்' தயாரித்துள்ள இந்த ராக்கெட் வெற்றிகரமாக ஏ வப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாகவே பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் தனது எக்ஸ் பதிவில், "இந்திய விண்வெளிப் பயணத்தில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய மைல்கல். நேற்று காலை 11.30 மணிக்கு ஸ்கைரூட் ஏரோஸ் பேஸ் நிறுவனம், இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டான விக்ரம்1 ஐ வெற்றிகரமாக ஏவும்.

விரைவான மற்றும் தேவைக்கேற்ப ஏவுதல் சேவைகளை வழங்கும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் நமது இளைஞர்களின்திறமை, உறுதி, தொழில்முனைவு மனப்பான்மை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

மேலும், நமது விண்வெளித்துறை சீர்திருத்தங்கள், புத்தாக்கம், தொழில்முனைவுக்கான புதிய வாய்ப்புகள் ஆகியவற்றை எவ்வாறு உருவாக்குகின்றன என்பதையும் இது காட்டுகிறது.

இந்த வெற்றிகரமான ஏவுதலுக்காக ஸ்கைரூட் ஏராஸ்பேஸ் குழுவினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள். விக்ரம் 1 வானில் உயர்ந்து, சரித்திரம் படைத்து, ஒரு தலைமுறை புத்தாக்கவாதிகளுக்கு உத்வேகம் அளிக்கட்டும்.

க்இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் வெற்றியை அடுத்து, #IndiaWithVikram1 என்ற ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி ஸ்கைரூட் குழுவின் வெற்றிக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்குமாறு அனைத்து இந்தியர்களையும் குறிப்பாக எனது இளம் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

'மிஷன் ஆகமன்:

'ஸ்கைரூட் ஏரோஸ் பேஸ்' என்ற தனியார் நிறுவனம் தயாரித்துள்ள இந்த ராக்கெட்டின் பயணத்துக்கு 'மிஷன் ஆகமன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவை சேர்ந்த தனியார் நிறுவனம், தான் சொந்தமாக உருவாக்கிய ஏவு தளத்தை பயன்படுத்தி செயற்கைக் கோளை விண்வெளி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த முயற்சிப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த பயணத்தின் நோக்கம் ஓர் செயற்கைக் கோளை மட்டும் விண்ணில் செலுத்துவது அல்ல. மாறாக, ராக்கெட்டின் அனைத்து நிலைகளும் விண்வெளி பயணத்தின் போது எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நேரடியாக மதிப்பீடு செய்து தரவுகளை சேகரிப்பதே இந்த சோதனையின் பிரதான இலக்காகும்.

350 கிலோ வரை எடை கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான செயற்கைக் கோள்களை 450 கிமீ தூரத்தில் பூமியின் தாழ்வான சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி சோதனை

### 6 மணி நேரத்திற்கும் மேலாக விசாரணை; கணக்கில் வராத ரூ.52 ஆயிரம் பறிமுதல்



தருமபுரி ஜூலை 19

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் நடத்திய திடீர் சோதனையால் பரபரப்பு ஏற்பட்டது. சுமார் 6 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்த சோதனையில், கணக்கில் வராத ரூ.52 ஆயிரம் ரொக்கம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.தமிழகம்முழுவதும் அரசு அலுவலகங்களில் லஞ்சப் புகார்கள் மற்றும் கணக்கில் வராத பணப் பரிவர்த்தனைகளைத் தடுக்க லஞ்ச ஒழிப்புத்துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக பத்திரப்பதிவு அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் அரசு அலுவலகங்களில் திடீர் சோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, இன்று மாலை சுமார் 4 மணியளவில் லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி நாகராஜன் தலைமையில், ஆய்வாளர் பெருமாள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழு நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டது.

அந்த நேரத்தில், புதிதாக பொறுப்பேற்ற கோட்டாட்சியர் ஜார்ஜ் தலைமையில் அமைதிக்குழு (Peace Committee) கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதில் 10க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்த நிலையில், லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் அலுவலகத்திற்குள் நுழைந்து பொதுமக்களை வெளியே அனுப்பிவிட்டு சோதனையைத் தொடங்கினர். பின்னர், வட்டாட்சியர் பிரசன்னமூர்த்தி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட அலுவலக ஊழியர்களிடம் தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டது. அலுவலகத்தின் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மூடப்பட்ட நிலையில் ஆவணங்கள், பணப் பதிவேடுகள் மற்றும் பணப் பரிவர்த்தனைகள் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டன. இந்த சோதனையின் போது, கணக்கில் வராத ரூ.52 ஆயிரம் ரொக்கம் மற்றும் சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து 6 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற விசாரணைக்குப் பிறகு, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பணம் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த அதிரடி சோதனை, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## வழி தவறி சுற்றித்திரிந்த பள்ளி மாணவன் பெற்றோரிடம் ஒப்படைத்த நிமிர் குழுவினர்

மார்த்தாண்டம், ஜூலை. 19

அருமனை அருகே உத்தரங்கோடு பகுதியில் நேற்று முன்தினம் பையுடன் சிறுவன் ஒருவன் சுற்றித்திரிந்தான். இதனைப் பார்த்த அப்பகுதி மக்கள் காவல் நிலையத்திற்குதகவல் தெரிவித்தனர். இதைஅடுத்து அருமனை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்த போது பளுகல் அருகே கண்ணுமாமூடு பகுதியை சேர்ந்த 13 வயது சிறுவன் என்பது தெரிய வந்தது.

மேலும் மேல்பாலையில் உள்ள தனியார் பள்ளியில் படிப்பதாக சிறுவன் கூறினான். அந்தப் பள்ளிக்கு தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த கல்வியாண்டில் அங்கு படித்து வந்ததாகவும், பின்புபள்ளிக்குவரவில்லைஎனதலைமை ஆசிரியர் கூறியுள்ளார். தொடர்ந்து திமிர் குழுவினருக்கு போலீசார் தகவல் அளித்தனர். அதன்பேரில் அங்கு வந்த எஸ்ஐ புஷ்பா தலைமையில் குழுவினர் விசாரித்ததில், கடந்த 6 மாதத்திற்கு முன்பு சிறுவன் பள்ளிக்கு சரிவர செல்லாத காரணத்தால் தக்கலை அருகே மணலி பகுதியில் உள்ள தனியார் பள்ளி விடுதியில் சேர்த்து தங்கி படித்து வந்த மாணவன் என்பது கண்டறியப்பட்டது.

பின்னர் குழுவினர் சிறுவனை பெற்றோருடன் ஒப்படைத்தனர். அப்போது தனது தாயைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை என்றும், அதனால் தான் விடுதியில் காம்பவுண்ட் சுவரைத் தாண்டி குதித்து வீட்டிற்கு செல்லலாம் என நினைத்து, வழி தவறி சென்று விட்டதை கூறினார். தொடர்ந்து சிறுவனை வரும் 20ம் தேதி நாகர்கோவில் உள்ள குழந்தைகள் நல அலுவலகத்திற்கு அழைத்து வரும்படி மாணவனின் பெற்றோரிடம் கூறியுள்ளனர்.

## கோவை ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட்

## மாணவர்கள் 170 பேர் நீட் யுஜி 2026 தேர்வில் சிறந்த தரவரிசை



கோவை ஜூலை:19

நாட்டின் முன்னணி தேர்வுப் பயிற்சி நிறுவனமான ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் கோவையில்உள்ள தனது வகுப்பறைப் பயிற்சி மாணவர்களில் 170 பேர் தேசிய தகுதித் தேர்வு மற்றும் நுழைவுத் தேர்வான நீட் யுஜி 2026 தேர்வில் சிறந்த தரவரிசைகளைப் பெற்றுள்ளனர்.

இதற்கு ஆகாஷ் வழங்கிய கல்வி வழிகாட்டுதல் மற்றும் கட்டமைக்கப்பட்ட கற்றல் சூழலும் முக்கிய காரணிகளாக இருந்தன.

நிதின் தினகர்பாபு அகில இந்திய அளவில் (AIR) 522வது இடத்தைப் பெற்றுள்ளார்.மேலும் முத்துராகவ்,ஹர்ஷிதா, வெங்கடேஷ்,எம்.பூமிகா,பிரித்திகா, வாசினி என பல மாணவர்கள் சிறப்பான அகில இந்திய தரவரிசைகளைப் பெற்று கோவை மையத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த ஆண்டு ஆகாஷ் மாணவர்களில் 4 பேர் அகில இந்திய தரவரிசையில் முதல் 10 இடங்களிலும்,18 பேர் முதல் 50 இடங்களிலும்,41 பேர் முதல் 100 இடங்களிலும் இடம்பெற்று தொடர்ந்து சிறப்பான சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இந்த வெற்றி எதிர்காலத்தில் ஒரு சிறந்த மருத்துவராக உருவாக இன்னும் அதிக அர்ப்பணிப்புடன் உழைக்க எங்களுக்கு ஊக்கமளிக்கிறது என்றார்.

ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் துணை மண்டல இயக்குநர் டி. சிவா பிரசாத் கூறுகையில்,மாணவர்களின் இந்தச்சாதனை ஆகாஷ் குடும்பம் முழுவதற்கும் பெருமையான தருணமாகும்.இந்த சிறப்பான வெற்றிக்காக மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் எங்களது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் இன் ஒருங்கிணைந்த கற்றல் அமைப்பு,அனுபவமிக்க ஆசிரியர்கள், அறிவியல் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட பாடப்பொருள்,தொழில்நுட்ப ஆதரவுடன் கூடிய கற்றல், வழக்கமான மதிப்பீட்டுத் தேர்வுகள், செயற்கை நுண்ணறிவு சார்ந்த செயல்திறன் பகுப்பாய்வு மற்றும் தனிப்பட்ட வழிகாட்டுதல் ஆகியவற்றை

ஒருங்கிணைத்து,நீட் போன்ற கடுமையான போட்டித் தேர்வுகளில் மாணவர்கள் சிறந்து விளங்க உதவுகிறது.நாடு முழுவதும் பரந்து விரிந்த தனது பயிற்சி மையங்கள் மற்றும் டிஜிட்டல் கற்றல் தளங்கள் மூலம் ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மருத்துவ நுழைவுத் தேர்வு மாணவர்களுக்கு வழிகாட்டி,அவர்களை ஊக்குவித்து வருகிறது.



## தக்கலையில் மாற்றுதிறன் மாணவர்களுக்கான சிறப்பு கல்வி மையம்: எம் பி திறந்து வைத்தார்

தக்கலை, ஜூலை.19

தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாற்றுதிறன் மாணவர்களுக்கான சிறப்பு கல்வி மற்றும் பயிற்சி மையம் அமைக்க வேண்டுமென பொதுமக்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 54.40 லட்சம் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டது. அதற்கான திறப்பு விழா நடைபெற்றது. கட்டிடத்தை கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசுகையில்:

நீட்தேர்வுமுறைகேடுகள் தொடர்பாக நமது காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, பிரதான் ராஜினாமாவைக் கோரியுள்ளார், மேலும் காங்கிரஸ் சார்பில் நாங்கள் இதை வலியுறுத்தி வருகிறோம். அனைத்து மாவட்டங்களிலும் நாங்கள் எங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறோம். மத்திய அரசு அவரை நிச்சயமாகப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம் என தெரிவித்தார். நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சி குமரி மேற்கு மாவட்ட தலைவர் டாக்டர்

பினுலால் சிங், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ரத்தினகுமார், குமாரபுரம் பேரூராட்சி தலைவர் ஜாண்கிறிஸ்டோபர், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி லைலா, வட்டாரத் தலைவர்கள் ஹனுகுமார், ஜெபா, ரவி சங்கர், முன்னாள் மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் திபாகர், முதன்மை கல்வி அலுவலர் ஆரோக்கியராஜ், மாவட்ட கல்வி அலுவலர் சௌந்தர் ராஜன், வட்டார கல்வி அலுவலர் ஜெய்சிங் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பள்ளியில் விளையாடிய 8ம் வகுப்பு மாணவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

மார்த்தாண்டம், ஜூலை. 19

மார்த்தாண்டம்அருகேபிடாரம்விளை என்றபகுதியைசேர்ந்தவர்விஜயலட்சுமி (59). இவரது மகள் கடந்த சில வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். மருமகன் வெளியூரில் சென்று விட்டார். இதனால் அவரது பேரன் மெர்வின் (13) என்ற சிறுவனை தன்னுடன் வளர்த்து வந்தார்.

மெர்வின் உண்ணாமலை கடை பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். நேற்று முன்தினம் மாலை பள்ளிக்கூடம் முடிந்த பின்னர் பள்ளிக்கூட மைதானத்தில் நண்பர்களுடன் கபடி விளையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது மெர்வின் திடீரென மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. இதனை பார்த்த சக மாணவர்கள் அவரை எழுப்ப முயற்சித்தும் மெர்வின் பேச்சு மூச்சின்றி கிடந்தார். உடனடி பள்ளி நிர்வாகிகள் மாணவரை குழித்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் மாணவர் ஏற்கனவே இறந்துவிட்டது தெரிவித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த மார்த்தாண்டம் போலீசார் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மாணவர் மெர்வின் கபடி விளையாடிய போது தவறு விழுந்து அடிபட்டதில் இறந்தாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பின் தெரிய வரும் என போலீசார் தெரிவித்தனர். மேலும் சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை பிரசாந்த் மருத்துவமனையில் நவீன 'லேசர் ஆஞ்சியோபிளாஸ்டி' சிகிச்சை அறிமுகம்



சென்னை, ஜூலை 19

பிரசாந்த் மருத்துவமனை, வேளச்சேரி கிளையில் 'இ.எல்.சி.ஏ எனப்படும் அதி நவீன லேசர் ஆஞ்சியோபிளாஸ்டி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தென் சென்னையில் இந்த வசதியைக் கொண்ட முதல் மருத்துவமனையாகவும், சென்னையில் இரண்டாவதாகவும் இது திகழ்கிறது.

இதன் மூலம் சிக்கலான இதய அடைப்பு உள்ள நோயாளிகள், பெரிய அறுவை சிகிச்சைகள் இல்லாமல், தங்கள் வீட்டிற்கு அருகிலேயே விரைவாக சிகிச்சை பெற்று விரைவில் வீடு திரும்ப முடியும். இந்த புதிய வசதியை திரைப்பட இயக்குனர் கே.எஸ். ரவிக்குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மூத்த இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் அரவிந்த் துர்வாசல் மற்றும் பிரசாந்த் மருத்துவமனைகள் குழுமத்தின் இயக்குனர் டாக்டர் பிரசாந்த் கிருஷ்ணா ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த புதிய வசதியைத் தொடங்கி வைத்து, திரைப்பட இயக்குனர் கே. எஸ். ரவிக்குமார் பேசுகையில், "இன்றைய காலகட்டத்தில் குடும்பங்கள் சந்திக்கும் மிகப்பெரிய சுகாதார சவால்களில் ஒன்றாக இதய நோய் மாறிவிட்டது. மேம்பட்ட மருத்துவத் தொழில்நுட்பம் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டுமே சுருங்கிவிடக் கூடாது. உலகத் தரம் வாய்ந்த இதய சிகிச்சையை தென் சென்னை மக்கள் எளிதாகப் பெறும் வகையில், பிரசாந்த் மருத்துவமனை இதுபோன்ற அதிநவீன சிகிச்சை முறையை கொண்டு வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. புதுமையான தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த மருத்துவ சேவையின் மூலம் உயிர்களைக் காப்பாற்றும் மருத்துவக் குழுவினரின் தொடர்ச்சியான பணிக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்." இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் டாக்டர் அரவிந்த் துர்வாசல் பேசுகையில்,"

எந்த இரண்டு இதய அடைப்புகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மிகவும் கடினமான இதய அடைப்புகளையும் பாதுகாப்பாகச் சரிசெய்யவும், ரத்த ஓட்டத்தை துல்லியமாக சீரமைக்கவும், சில நோயாளிகளுக்குப் பெரிய அளவிலான அறுவை சிகிச்சைகளைத் தவிர்க்கவும்

இந்த 'எக்ஸைமர் லேசர் கரோனரி அதெரெக்டமி' உதவியாக இருக்கும். இந்த சிகிச்சை மிகவும் சிக்கலான இதய அடைப்புகளுக்குச் சிகிச்சை அளிக்கும் எங்களது திறனை மேம்படுத்துவதோடு, நோயாளிகளுக்கு வலியற்ற எளிதான சிகிச்சை, விரைவாகக் குணமடைதல் மற்றும் நீண்டகால நன்மைகளையும் உறுதி செய்கிறது." என்றார்.



# பாஜக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி, ஜூலை 19

தூத்துக்குடி நகரின் பிரதான சாலைகளில் புதிதாக டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதற்கு பாரதிய ஜனதா கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. உடனடியாக அந்த கடைகளை மூட நடவடிக்கை எடுக்காவிட்டால், பாஜக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என தூத்துக்குடி தெற்கு மாவட்ட தலைவர் சித்ராங்கதன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் 717 டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் 63 டாஸ்மாக் கடைகள் மூடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி சில கடைகள் மூடப்பட்டிருந்தாலும், தூத்துக்குடி எட்டயபுரம் சாலை மற்றும் குறிஞ்சி நகர் மெயின் ரோட்டில், கலைஞர் அரங்கம் அருகில் ஏற்கனவே செயல்பட்டு வந்த ஒரு டாஸ்மாக் கடையின் அருகிலேயே அடுத்தாக புதிதாக மேலும் இரண்டு டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. ஒருபுறம் டாஸ்மாக் கடைகளை மூடுவதாக அறிவித்துவிட்டு, மறுபுறம் ஒரே பகுதியில் கூடுதலாக கடைகள் திறப்பது ஏற்றுக் கொள்ள முடியாத செயல். மது போதையால் கொலை, வழிப்பறி, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், மேலும் புதிய கடைகள் திறப்பது சமூக விரோத செயல்களுக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் பொதுமக்களிடையே நிலவுகிறது.

மேலும், இந்த பகுதி பெண்கள், குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்கள் அதிகளவில் பயன்படுத்தும் பிரதான சாலையாகும். புதிய டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டதால் மது அருந்துவோரின் நடமாட்டம் அதிகரித்து, அப்பகுதியில் வசிக்கும் மக்களும் சாலையை பயன்படுத்துவோரும் அச்சத்துடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் தான் மது போதையில் பல்வேறு குற்ற சம்பவங்கள் நடைபெற்றது தற்போது தன்னை தூய சக்தியாக கருதிக் கொள்ளும் தவெக அரசும் அதே பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறது

எனவே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு, அந்த பகுதியில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மூன்று டாஸ்மாக் கடைகளையும் மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் பாரதிய ஜனதாகட்சியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று சித்ராங்கதன் தெரிவித்துள்ளார்.




# பணி நிரந்தரம் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஜூலை 19

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களாக பணிபுரியும் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக முழுவதும் உள்ள அனைத்து மின்வாரிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர் அந்த வகையில் மதுரை புதூர் பகுதியில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம் முன்பு முன்னாடியே ஒப்பந்த தொழிலாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பியபடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அடுத்த கட்ட நடவடிக்கையாக சென்னையில் மிகப்பெரிய அளவில் அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களையும் திரட்டி பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் செய்ய இருப்பதாக தெரிவித்தனர்.

# குளிக்க சென்றவர் தண்ணீரில் மூழ்கி மரணம்



இரணியல்.ஜூலை.19

இரணியல் அருகே உள்ள வில்லுக்குறி அடுத்த குதிரை பந்தி விளை என்ற இடத்தை சேர்ந்தவர் வர்க்கீஸ் (50) மரவேலை செய்து வருகிறார் இவருக்கு மனைவி மற்றும் மூன்று மகன்கள் உள்ளனர் இவருக்கு மதுப்பழக்கம் இருப்பதாக தெரிகிறது நேற்று மாலை அருகே உள்ள இரட்டை கரை கால்வாய்க்கு குளிக்க சென்றார் நீண்ட நேரம் ஆகி வீடு திரும்ப வில்லை இதனால் சந்தேகம் அடைந்த மனைவி மற்றும் உறவினர்கள் கால்வாய் சென்று பார்த்த போது மயங்கிய நிலையில் தண்ணீரில் மிதந்ததாக தெரிகிறது அக்கம் பக்கம் உறவினர்கள் நண்பர்கள் மீட்டு ஆசாரி பள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர் மருத்துவர்கள் பரிசோதனை செய்து விட்டு வரும் வழியில் இறந்து விட்டார் என்று கூறினார் இது குறித்து புகாரில் பேரில் இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# நீட் தேர்வில் ஈரோடு அளவில் 'ஆகாஷ்' மாணவன் நிகில் சிவானந்தம் முதலிடம்: கேடயம் வழங்கி பாராட்டு



ஈரோடு ஜூலை 19

ஈரோடு பெருந்துறை ரோடு வீரப்பம் பாளையத்தில் ஆகாஷ் கல்வி நிறுவனம் செயல்படுகிறது. இந்த மையத்தில் நிகில் சிவானந்தம் என்ற மாணவர் நீட் தேர்வுக்கு படித்து வந்தார்.

இவர் தகுதி மற்றும் நுழைவு தேர்வில் (நீட் யூஜி) 720 க்கு 691 மதிப்பெண் பெற்று அகில இந்திய தர வரிசை 92 ஐ பெற்று ஈரோடு அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்து உள்ளார்.

இந்த ஆண்டு ஆகாஷ் மாணவர்கள் பெரிதும் விரும்பும் முதல் தர வரிசைகளை பெற்று உள்ளனர். நாடு தழுவிய அளவில் முதல் 10 இடங்களுக்குள் 4 மாணவர்களும் முதல் 50 இடங்களுக்குள் 18 மாணவர்களும் முதல் 100 இடங்களுக்குள் 41 மாணவர்களும் இடம் பிடித்து உள்ளனர். இது பற்றி மாணவன் நிகில் சிவானந்தம் கூறும் போது அகில இந்திய அளவில் 92 வது இடத்தை பிடித்ததின் மூலம் எனது கனவு நனவாகி உள்ளது. இது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என்று கூறினார். இது பற்றி ஆகாஷ் நிறுவனத்தின் தமிழ் நாடு ரீஜினல் விற்பனைதலைமை அதிகாரி பிரதீப் உன்னிகிருஷ்ணன் முதன்மை உதவி இயக்குநர் ராகவேந்திரா ஆகியோர் தெரிவித்தனர். இதில் ஈரோடு மேலாளர் கோபிநாத் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## கிள்ளியூர்

# கடலோரக் கிராமங்களை அழிக்கும் ஐ.ஆர்.ஈ.எல் அணுக்கனிம சுரங்கத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்

## முதல்வருக்கு சேலம் ஆர்.ஜே. குட்டி பிரகாஷ் கோரிக்கை



சேலம் ஜூலை 19

குமரி மாவட்டம் கிள்ளியூர் கடலோரக் கிராமங்களை அழிக்கும் ஐ.ஆர்.ஈ.எல் அணுக்கனிம சுரங்கத் திட்டத்தை உடனடியாக ரத்து செய்க; தமிழக முதல்வருக்கு சேலம் ஆர்.ஜே. குட்டி பிரகாஷ் அவசரக் கோரிக்கை! கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் தாலுகாவிற்குட்பட்ட 8 கடலோரக் கிராமங்களில் பெரும் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரப் பாதிப்பை ஏற்படுத்தி வரும் ஐ.ஆர்.ஈ.எல் நிறுவனத்தின் அணுக்கனிம மணல் அள்ளும் திட்டத்திற்கான கால நீட்டிப்பை ரத்து செய்து, ஒட்டு மொத்த திட்டத்தையும் மத்திய, மாநில அரசுகள் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று சமூக ஆர்வலரும், ஊடக ஆளுமையுமான சேலம் ஆர்.ஜே. குட்டி பிரகாஷ் விடுத்துள்ள விரிவான அறிக்கையில் வலியுறுத்தி அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியிரு ப்பதாவது: "கன்னியாகுமரி மாவட்டத்தின் கீழ்மிடாலம், மிடாலம், இணையம் புத்தன்துறை , ஏழுதேசம், கொல்லங்கோடு உள்ளிட்ட 8 கடலோரக் கிராமங்களில், சுமார் 1000ஏக்கர் மேல் பரப்பளவில் அணுக்கனிம மணல் சுரங்கம் அமைப்பதற்கான கால அவகாசத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து அரசாணை வெளியிட்டிருப்பது ஒட்டு மொத்த பொதுமக்களையும், கடலோர மக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஏற்கனவே இப்பகுதியில் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் மணல் அள்ளும் பணிகளால், கடல் அரிப்பு தீவிரமடைந்து கிராமங்களுக்குள் கடல் நீர் புகுந்து வருகிறது. நிலத்தடி நீர் முற்றிலுமாக உவர்ப்பு நீராக மாறி குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், தென்னைவிவசாயமும், கடலோர மீன்வளமும் அழிவின் விளிம்பிற்குச் சென்றுள்ளன. மேலும், இல்மனைட், ரூடைல், ஜிர்கான், மோனசைட் போன்ற கதிர்வீச்சுத் தன்மை கொண்ட அணுக்கனிமங்களை மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே வெட்டி எடுப்பதால், அப்பகுதி மக்களிடையே புற்றுநோய் போன்ற கொடிய நோய்களின் பாதிப்புகள் அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர். லட்சக்கணக்கான மீனவ மற்றும் விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் இந்தத் திட்டத்தை மக்களின் நலன் கருதி ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களின் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் கூட பொதுமக்களின் பலத்த எதிர்ப்பால் ரத்து செய்யப்பட்ட நிலையில், கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்திற்காக இந்த நச்சுத் திட்டத்தை உயிர்ப்போடு வைத்திருக்க முயல்வது கண்டிக்கத்தக்கது. மக்களின் முதல்வராகத் திகழும் தமிழக முதல்வர் , இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, மக்களின் உணர்வுகளுக்கும் இயற்கை வளங்களுக்கும் மதிப்பளித்து, இந்தத் திட்டத்திற்கான நில ஒதுக்கீட்டு அனுமதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் நிலக்கீல் தரக்கட்டுப்பாடு ஆய்வக கட்டிடத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் து.சண்முகன், கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் , மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, தலைமையில் மதுரை மாவட்டம்,மதுரை மாநகராட்சி மண்டலம் 3,வார்டு எண் 50இல் சிம்மக்கல், கோவிந்தன் செட்டி தெருவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் உரிமைகள் திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான"விழுதுகள்" ஒருங்கிணைந்த சேவை மையத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார். இம்மையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிசியோதெரபி, உளவியல் ஆலோசனை, சிறப்புக் கல்வி, UDID அட்டை, அரசு நலத்திட்டங்கள், கல்வி உதவித்தொகை மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் ஒரே இடத்தில் இலவசமாக வழங்கப்படுகின்றன. மத்திய சட்டமன்ற உறுப்பினர் மதார் பதூருதின், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன், மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் தி.நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், ஆகியோர் உடன் உள்ளனர்.



தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர்புரம் பகுதியில் கடந்த நாட்களில் ஏற்பட்டதீவிபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு உபயோக பொருட்களை மாநகராட்சி மேயர் ஜெகன் பெரிய சாமி வழங்கினார். உடன் லூர்தம்மாள்புரம் பங்கு தந்தைசெல்வன்,பகுதிகழகசெயலாளரும்மண்டலதலைவருமானதம்பிதொ.நிர்மல்ராஜ் , கழக நிர்வாகி வேனி சந்தானம் , வட்ட கழக பிரதிநிதி கிளமெண்ட் , மாநகர மீனவரணி துணை அமைப்பாளர் ஜெனிபர் ராபர்ட் , கழக நிர்வாகிகள் தேவேந்திரன் , அருள்ராஜ் , பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எமல்டன் , இளைஞரணி தினேஷ் , ஸ்நோசன் , ஜெஸ்வன் , கோகுல், சந்தணக்குமார் , ஜெப்சன் மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்

## விளாத்திகுளம் அருகே

# கோவில் கொடை விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம்



விளாத்திகுளம் ஜூலை 19.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காளியம்மன் கோவில் ஆனி மாத கொடை விழாவை முன்னிட்டு மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

சின்னமாடு,பூஞ்சிட்டு என இரு பிரிவுகளாக நடைபெற்ற இந்த போட்டியில் ராமநாதபுரம், விருதுநகர்,மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 52 ஜோடி மாடுகள் போட்டியில் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்தன, சின்னமாட்டு பந்தயத்திற்கு போக வர 6 மைல் தூரமும், பூஞ்சிட்டு போட்டிக்கு போக வர 5 மைல் தூரமும் போட்டியானது நிர்ணயிக்க ப்பட்டு, மீனாட்சிபுரம் முதல் குளத்தூர் சாலையில் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டி வந்த சாரதிகளுக்கு விழா கமிட்டியின் சார்பாக பரிசுத்தொகை மற்றும் குத்துவிளக்கு பரிசாக வழங்கி கௌரவிக்கப்பட்டது. வெற்றி இலக்கை நோக்கி சீறிப்பாய்ந்த காளைகளை சாலையின் இரு புறமும் நின்று பொதுமக்கள் மற்றும் பந்தய ரசிகர்கள் ஆர்வமுடன் கண்டு ரசித்தனர்.

நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் மார்க்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல்,புதூர் பேரூர் கழக பொறுப்பாளர்வெற்றிவேலன்,கழகநிர்வாகிகள், கிராம பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## தருமபுரி குமாரசாமி பேட்டையில் உள்ள

# ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் ஆடி வெள்ளியை முன்னிட்டு சிறப்பு வழிபாடு



தருமபுரி ஜூலை 19

தருமபுரி நகரம் குமாரசாமி பேட்டையில் உள்ள ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி திருக்கோவிலில் ஆடி மாத வெள்ளிக்கிழமையை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து இரவு நடைபெற்ற சிறப்பு பூஜையில் அம்மனுக்கு வெள்ளி கவசம் சாத்தப்பட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் நகரப் பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் பக்தர்க ளுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# வீட்டில் வைத்து போதை மாத்திரைகள் விற்பனை: 15,000 மாத்திரைகள் பறிமுதல்



திருச்சி, ஜூலை 19

திருச்சி மாநகரில் சமீபகாலமாகவே போதை மாத்திரைகள், போதை ஊசிகளின் புழக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, கடந்த 40 நாட்களில் மட்டும் போதை ஊசி செலுத்திக் கொண்டதால் 3 இளைஞர்கள் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் திருச்சியையே உலுக்கியது. இதனைத் தொடர்ந்து, மாநகர காவல் ஆணையர் காமினி உத்தரவின் பேரில், போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் மற்றும் கோட்டை காவல் நிலைய போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், திருச்சி பெரிய கடை வீதி மல்லிகை தெரு பகுதியில் உள்ள கணேஷ் பாண்டியன் என்பவரது வீட்டில் சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் பதுக்கப்பட்டு, விற்கப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன்பேரில், உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், கணேஷ் பாண்டியனின் வீட்டை முற்றுகையிட்டு அதிரடி சோதனை நடத்தினர். இதில், போலீசார் கைப்பற்றிய போதைப்பொருட்களின் அளவை பார்த்து ஒட்டுமொத்த தமிழகமே அதிர்ச்சியில் மூழ்கியுள்ளது.

அந்த வீட்டில் இருந்து சுமார் 15,000 போதை மாத்திரைகளை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். மேலும், ரூ.1 லட்சம் ரொக்கம், 4 செல்போன்கள், 1 லேப்டாப், 1 இருசக்கர வாகனம், கத்தி அரிவாள் ஆயுதங்கள் ஆகியவற்றையும் போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும், இந்த போதை மாத்திரைகளை வீட்டில் பதுக்கி வைத்து விற்றுக் கொண்டிருந்த கணேஷ் பாண்டியன் மற்றும் அவருக்கு உதவியாக இருந்த கார்த்திக் ஆகிய இருவரையும் கோட்டை போலீசார் கைது செய்தனர். அவர்கள் இருவரிடமும் தற்போது போலீசார் தீவிரவிசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மாத்திரைகள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டன? இதன் பின்னணியில் பெரிய புள்ளிகள் யாரேனும் உள்ளனரா? யார் யாருக்கெல்லாம் இவை விற்பனை செய்யப்பட இருந்தன? உள்ளிட்ட கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தமிழகம் முழுவதும் போதைப்பொருட்களை ஒழிக்க கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறு காவல்துறை உயரதிகாரிகளுக்கு முதலமைச்சர் விஜய் அண்மையில் உத்தரவிட்டார். இதையடுத்து, மாநிலம் முழுவதும் போலீசார் நடத்தி வரும் அதிரடி சோதனைகளில் இதுபோன்ற பல போதைப்பொருட்கள் தொடர்ந்து பறிமுதல் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

# தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்றால் கடும் நடவடிக்கை: கலெக்டர் எச்சரிக்கை

ஈரோடு ஜூலை 19

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது தமிழக அரசு குட்கா, பான்மசலா போன்ற புகையிலைப்பொருட்கள் தடை செய்துள்ளது. காவல்துறை, உணவு பாதுகாப்புத்துறை, உள்ளாட்சித்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பள்ளி, கல்லூரி அருகாமையில் உள்ள கடைகளில் தீவிர ஆய்வு மேற்கொண்டு இத்தடையினை மீறி விற்பனையில் ஈடுபடும் கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு கடைகளை மூட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஜனவரி முதல் ஜீன் வரை தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருட்கள் விற்பனை செய்த 279 கடைகள் மூடப்பட்டு ரூ.78 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு 551.83 கிலோ தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு மாவட்ட அளவிலான அழிப்புக்குழு மூலம் குப்பைக் கிடங்கில் அழிக்கப்பட்டுள்ளது. 90 நாட்களும் உணவு வணிக நிறுவனம் மூடப்பட்டு சம்பந்தப்பட்ட உணவு வணிகத்தின் உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் தொழில் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டு அபராதம் விதிப்பு நடவடிக்கைகளில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்த உணவுப்பொருட்களை விற்பனை செய்ததற்காக எவருக்கெதிரேனும் காவல்துறையில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டிருந்தால் வியாபாரத்திற்கு எதிராக தடையாணைப் பெற்று வணிகத்தை நிறுத்துவது, அபராதம் விதிப்பது போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பொதுமக்கள் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் நிகோட்டின் கலந்த உணவுப்பொருட்களை விற்பனை செய்வது குறித்து புகார்களை 0424 2223545 மற்றும் 94440 42322 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம். அவ்வாறு புகார் அளிக்கும் நுகர்வோர்களின் விபரம் ரகசியமாக வைக்கப்படும் . இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோட்டில் தோட்டக்கலை அலுவலர் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்




ஈரோடு ஜூலை 19

தோட்டக்கலை துறையில் உள்ள உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் UATT 2.0 திட்டத்தினை கைவிட வேண்டி வலியுறுத்தி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தோட்டக்கலை துறை அலுவலகர்கள் சங்கத்தை சேர்ந்தவர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் சங்கத்தின் தோட்டக்கலைதுறையை சேர்ந்த அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை துறை அலுவலர் சங்கத்தின் கூட்டமைப்பின் சார்பில் தோட்டக்கலை இயக்குனர் மாவட்டத் தலைவர் நர்மதா

தோட்டக்கலை அலுவலர் மாவட்டத் தலைவர் மகேந்திரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தமிழக அரசு கடந்த 2023ம் ஆண்டு கொண்டு வந்து உள்ள உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0 என்ற திட்டத்தினால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகளின் நலன் கருதி அந்த திட்டத்தை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும்,

வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் வணிகம் விற்பனைத்துறை ஆகிய மூன்று துறை கண்காணிப்பாளர்களை ஒன்றிணைத்து மேற்படி மூன்று துறையுடன் சேர்ந்து வேளாண் பொறியாளர் துறையின் திட்டங்களை சேர்த்து நான்கு துறை பணிகளை ஒரு கண்காணிப்பாளர் என மேற்கொள்ள வேண்டும் இதுவே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பிய படியும் கைகளில் பதாகைகள் ஏந்திய படியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இந்திய தேசத்திற்காக உயிர் தியாகம் செய்த தியாகிகளின் திருவருட்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது



திருப்பூர்: ஜூலை19

லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ஜோஸ் சார்லஸ் எம் எல்ஏ மார்ட்டின் அவர்களின் அறிவுறுத்தலின்படி பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்களின் ஆலோசனை படியும் இந்திய தேசத்திற்காக உயிர் தியாகம் செய்த தியாகிகளின் திருவருட்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது மகாத்மாகாந்தி. வீரபாண்டிய கட்டபொம்மன்.

திருப்பூர் கொடிகாத்த குமரன்.அம்பேத்கர் ஆகிய தலைவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாநில துணைப் பொதுச்செயலாளர் குளோபல் மு.பூபதி. மாநில முதன்மைச் செயலாளர் கண்ணன் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் செந்தில் வாண்டையார். திருப்பூர் கொடிகாத்த குமரன் பேரனாகிய திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் பிரபு அவர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தெற்கு மாவட்டத்தை சேர்ந்த துணைத் தலைவர்கள். துணைச் செயலாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# உலக புகழ் பெற்ற பாக் ஜலசந்தி கடலில் கடல்பாசி அதிக அளவில் எடுப்பதால் அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து வரும் அபாயம்


### மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க தமுமுக மாநில செயலாளர் சாதிக் பாட்சா கோரிக்கை



ராமநாதபுரம், ஜூலை 19

ராமநாதபுரம் மாவட்டம் பாக் ஜலசந்தி வங்காள விரிகுடாவின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த பாக்ஜலசந்தி கோடியக்கரை தொடங்கி ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி, மண்டபம் அருகில் உள்ள பகுதியாக இருக்கிறது. இந்த கடலை பெண் கடல் என்று அழைப்பார்கள். கடலில் அலைகள் மிகவும் அமைதியாக சற்று வேகம் குறைந்த அளவிலே உள்ளன. அதனால் கடலை பெண் கடல் என்று அழைக்கிறார்கள். கடலின் சிறப்பு நான்கு வகையான சுற்றுச்சூழலை கொண்டுள்ளது. கடல்பாசிகள், கடல் சதுப்பு நிலக்காடுகள், மற்றும் பவளப்பாறைகள் போன்ற சுற்றுச்சூழலை கொண்டுள்ளது .மேலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் எஸ்.பி. பட்டணம் தொண்டி கடற்கரையில் இருந்து பாம்பன் கடல் வரை இந்த இயற்கை சூழல் கடல்வாழ் உயிரினங்களுக்கு உறைவிடமாகவும் உணவாகவும் பாதுகாப்பாகவும் திகழ்கிறது.

கடல்பாசிகள் கடல் பொருட்கள் பவளப்பாறைகள் நிறைந்து காணப்படுவதால் மீன்வளம் அதிக அளவில் காணப்படும். மேலும் இந்த இயற்கை சூழலானது கடலோர மக்களுக்கு பாதுகாப்பாகவும் கடலோர மக்கள் வாழ்வாதாரத்திற்காகவும் மற்றும் மீன்வளம் பெருகுவதற்கு இது பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும் சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பேரழிவிலிருந்து கடலோர மக்களை பாதுகாக்கிறது. கடலில் ஐந்து வகையான பாசிகள் இயற்கையாகவே வளர்கின்றன. அதனால் இங்கு அதிக அளவில் மீன் வளம் காணப்படுகிறது. இக்கடலில் அரிய வகை உயிரினமான பாதுகாக்க வேண்டிய கடற் பசுக்கள் காணப்படும். கடல் பசுவுக்கு கடற்பாசி உறைவிடமாகவும் உணவாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் இருக்கும். இப்படிப்பட்ட சூழலில் கடல்பாசியை கடலில் இருந்து அதிக அளவில் எடுப்பதால் மீன் வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவ மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கும். தொழிற்சாலைகள் அதிக அளவில் கடல்பாசி எடுப்பதால் கடல் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இதனை நாம் உடனடியாக சரி செய்ய கடல்பாசியை எந்த அளவிற்கு கடலில் இருந்து எடுக்கிறோமோ அந்த அளவிற்கு அதை வளர்ப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். மீன் வளத்தை பாதுகாக்க முடியும். தவறினால் மிகப்பெரிய பாதிப்பிற்கு உள்ளாக்க ப்படுவோம். கடல்பாசிகள் பல்வேறு விதங்களில் பயபடுகிறது உணவு விவசாயம் மருந்து தயாரித்தல் உட்பட பலவற்றிற்கு பயன்படுகிறது. எனவே கடற்பாசி வளர்ப்பதற்கு வளர்த்து அதை அறுவடை செய்வதற்கும் மீனவ மக்களுக்கும் மீன் சார்ந்த தொழில் செய்பவர்களுக்கும் மீனவ பெண்களுக்கும் முறையான பயிற்சிகள் கிராமங்கள் தோறும் கொடுக்க வேண்டும். கடல்பாசி வளர்க்காமல் அறுவடை செய்வதை அரசு தடுக்க வேண்டும். மீனவ மக்கள் நலன் கருதி அரசு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய நடவடிக்கை எடுத்து வழிகாட்டுதல் செய்ய வேண்டும் என்று தமுமுக மாநில செயலர் தொண்டி சாதிக்பாட்சா கோரிக்கை மனு அனுப்பி உள்ளார்.



# திருச்சி டிஸ்ட்ரிக்ட் பிரஸ் & மீடியா கிளப் உறுப்பினர்களுக்கு இலவச முழு உடல் பரிசோதனை

திருச்சி, ஜூலை, 19

அச்சு ஊடகம், தொலைக்காட்சி ஊடகத்தை சேர்ந்த செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், புகைப்படக்காரர்கள் குறிப்பிட்ட நேரம் இன்றி பகல் இரவு என்று பாராமல் பணியாற்றி வருகின்றனர். தங்களின் ஆரோக்கியம் குறித்து கருத்தில் கொள்ளாமல் பணியாற்றி வருகின்றனர். மேலும் தங்கள் உடல்நிலையில் முறையான அக்கறை எடுத்துக் கொள்ளாததாலும், அவ்வப்போது மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளாததால் பல செய்தியாளர்களும், ஒளிப்பதி வாளர்களும் புகைப்படக்காரர்களும் இயற்கை எய்தி உள்ளனர்.

இச்செய்தி அறிந்த திருச்சி காவேரி மருத்துவமனை நிர்வாகத்தினர் திருச்சி டிஸ்ட்ரிக்ட் பிரஸ் & மீடியா கிளப் செய்தியாளர்களுக்கு இலவச முழு உடல் பரிசோதனை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கினர்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பத்திரிகையாளர் சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் கடந்த இரண்டு நாட்களாக காவேரி மருத்துவமனையில் தத்தம் உடல் பரிசோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

காவிரி மருத்துவமனையில் திருச்சி டிஸ்ட்ரிக்ட் பிரஸ் & மீடியா கிளப்பை சேர்ந்த 79 உறுப்பினர்களுக்கு ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு உள்பட 48 வகையான பரிசோதனைகள், இதய பரிசோதனை(இசிஜி, எக்கோ, டிரட்மில்), கல்லீரல், சிறுநீரக பரிசோதனை, எக்ஸ்ரே உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பரிசோதனைகள் கட்டணமின்றி மேற்கொள்ளப்பட்டன.

பத்திரிகையாளர்களின் நலனில் அக்கறை கொண்டு இலவசமாக காவேரி மருத்துவமனை இச்சலுகையை செய்து கொடுத்துள்ளது. இதனால் திருச்சி பத்திரிகை மற்றும் ஊடகத்தினர் பயனடைந்துள்ளனர்.

சுமார் ரூ.4 லட்சம் மதிப்பிலான இந்த மருத்துவ பரிசோதனைகளை முற்றிலும் இலவசமாக வழங்கி, பத்திரிகையாளர்களின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளித்த காவேரி மருத்துவமனை நிர்வாகத்திற்கு திருச்சி டிஸ்ட்ரிக்ட் பிரஸ்&மீடியா கிளப் சார்பில் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும், முகாமை ஏற்பாடு செய்த காவேரி மருத்துவமனை பிஆர்ஓ மனோஜ் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் திருச்சி டிஸ்ட்ரிக்ட் பிரஸ்&மீடியா கிளப் சார்பில் நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.



# புத்தக வெளியீட்டு விழா மூலம் பா.ஜ.க த.வெ.க இணைப்பிற்கான தரகு வேலையை வைகோ பார்க்கிறார்: திருச்சியில் மல்லை சத்யா

திராவிட வெற்றி கழகத்தின் தலைவர் மல்லை சத்யா திருச்சியில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசி னார். அப்போது அவர் தெரிவித்ததாவது ;

திராவிட வெற்றி கழகம் சார்பில் பெரியார், அண்ணா பிறந்த நாள் விழா, திராவிட இயக்க தீரர்களுக்கு விருது வழங்கும் விழா திருச்சியில் செப்டம்பர் 15 ஆம் தேதி நடைபெறுகிறது.

வைகோ திராவிட இயக்க கொள்கையிலிருந்து பிறழ்ந்து தடம் மாறி இருக்கிறார். மதிமுக திரிபுவாத இயக்கமாக மாறி மகன் திமுகவாக மாறி விட்டது. தன் வாரிசு துரைக்காக எங்கள் மீது துரோக பழியை சுமத்தினார். இந்த மாதத்தில் இந்திய தேர்தல் ஆணையம் எங்கள் கட்சி பதிவை ஏற்றுக்கொள்ளும் என எதிர்ப்பார்த்துள்ளோம்.

2026 தேர்தல் மிகப்பெரிய அதிர்ச்சியை அரசியலில் உருவாக்கியுள்ளது. பணம் கொடுக்காமல் வாக்களிப்பது சிறப்பு, ஆனால் வேட்பாளர் யார் என்றே தெரியாமல் வாக்களித்தது மிகப்பெரிய தவறு. சிறப்பான திட்டங்களை நிறைவேற்றிய ஸ்டாலின் போன்றோர் தோல்வி அடைந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது. தங்கத்திற்கு நிகராக இரும்பை வைத்து மக்கள் எடை போட்டுள்ளார்கள்.

த.வெ.க ஆட்சியில் நாள்தோறும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் நடந்து கொண்டுள்ளது. பட்ஜெட் கூட்டத்தில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

மதுபான கடைகளை மூடுவோம் என்றவர்கள் ரெஸ்ட்ரோ பார் திறக்க உள்ளதாக தகவல் வருகிறது. அதை அவர்கள் செய்ய கூடாது. அதற்கு வைகோ ஆதரவாக வரலாம், விஜய் ரசிகர் மன்ற தலைவராக வைகோவும் துரை வைகோவும் செயல்படுகிறார்கள். விஜய்க்கு டூப்பு போடும் விதத்தில் வைகோ நடித்தி வருகிறார்.

துரை வைகோவிடம் திமுக சார்பில் யாராவது ராஜினாமா செய்ய கூறினார்களா வாக்குக்கு பணம் கொடுக்கவில்லை என்பதை கூற முடியுமா ?

துரைவைகோ பரிசுத்தமானவர் அல்ல. அவரின் நடவடிக்கை வைகோவின் நடவடிக்கை விசாரிக்கப்பட வேண்டும். வைகோ நாடாளுமன்ற பேச்சு புத்தகமாக ஏற்கனவே சென்னையில் வெளியிடப்பட்டது. மீண்டும் புத்தகத்தை வெளியிடுவதற்கு பா.ஜ.க த.வெ.க இணைப்புக்கான இடைதரகு பணியை வைகோ செய்து வருகிறார். ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். லஞ்சம் ஊழல் குறைந்திருந்தால் காஞ்சிபுரம் ஊராட்சி மன்ற தலைவர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டிய தேவை இல்லை. த.வெ.க அரசை விமர்சனம் செய்பவர்கள் கைது செய்யப்படுவது த.வெ.க அரசு ஜனநாயக பாதையிலிருந்து பாஸிச பாதைக்கு செல்கிறதோ என்கிற சந்தேகம் வருகிறது.

திமுக வெற்றி பெற்றிருந்தால் திமுகவிலிருந்து வைகோ விலகி இருக்க மாட்டார். திருச்சியில் துரை வைகோ போட்டியிட ராகுல்காந்தியை தனியாக சந்தித்து ஸ்டாலின் பேசி சீட்டு வாங்கி கொடுத்தார். இன்று அவருக்கே துரோகம் செய்துள்ளார்கள். சுதந்திர கட்சி, ம.பொ.சி கட்சி, நாம் தமிழர் கட்சி, தமிழ் தேசிய முன்னணி உள்ளிட்ட கட்சிகள் காணாமல் கரைந்து போனது போல மதிமுகவும் ஒரு நாள் காணமல் போகும் என்றார்.



ஈரோடு மாவட்டம் பி.மேட்டுப்பாளையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் விஜய்பாலாஜி ஆகியோர் திறந்து வைத்தார்கள். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆனந்த் மோகன், சண்முகன் மற்றும், கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் அனைத்து சங்க தலைவருக்கு 90 வது பிறந்தநாள் விழா



மதுரை, ஜூலை 19

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் அனைத்து சங்கங்களுக்கும் ஈடு இணையற்ற ஒப்பற்ற தலைவராக திகழ்ந்த தானைத் தலைவர் சிவ. இளங்கோ அவர்களின் 90 வது பிறந்த நாள் விழா தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மதுரை மாவட்ட தலைவர் அ. இளங்கோ தலைமையில் மதுரை மாவட்ட தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில் வைத்து நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் அனைத்து நிலை பணியாளர்களுக்கும் பாதுகாவலனாக ஒப்பற்ற தலைவராக திகழ்ந்த தானைத் தலைவர் சிவ இளங்கோ அவர்கள் அனைவரின் கோரிக்கைகளை ஐந்துக்கும் மேற்பட்ட முதலமைச்சர்களுக்கு கொண்டு சென்று நிறைவேற்றிக் கொடுத்து அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின், அனைத்து நிலை பணியாளர்களின் கோரிக்கைகளை சலுகைகளாக பெற்றுத் தந்த மகத்தான தலைவர் சிவ இளங்கோ அவர்களின் பிறந்தநாள் விழாவில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் வெ.மகேந்திர குமார் மாநில பொருளாளர் பெ.திலகர், மாநிலத் துணைத் தலைவர் சசிகுமார் மாநிலச் செயலாளர்கள்

சண்முகசுந்தரம் மற்றும் ஆதி.குமார் உள்ளிட்டமூத்தநிர்வாகிகளும்,மேனாள் மாநில பொதுச் செயலாளர் மாவட்ட தலைவருமாகிய செ.சுருளிராஜ், மாவட்ட பொருளாளர் வெ.இளங்கோ, மேனாள் மாவட்ட தலைவர் ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள், செந்தில்குமார், சரவணன், சசி,மணிகண்டன், கருப்பையா, வேம்படியான், கோபி கண்ணன், வட்ட கிளை நிர்வாகிகள், கூட்டமைப்பு தலைவர்கள், அம்மா உணவக பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் முருகேஸ்வரி, பரமேஸ்வரி, கே சுமதி, எ. சுமதி, தீபா லட்சுமி, வான்மதி, ஈஸ்வரி, பிரேமா, ஒயம்மாள், அடைக்கலம், வாணி, தமிழ்ச்செல்வி, செல்வி உள்ளிட்ட நிர்வாகிகளும் வட்டக்கிளை இணைப்புச் சங்க நிர்வாகிகளும் ஓய்வு பெற்ற தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உலக அமைதி, நல்ல மழை வளம் வேண்டி 121 வேத விற்பன்னர்களால் 1331 முறை ஜெபிக்கப்படும் மகாருத்ர யாகம்



காஞ்சிபுரம், ஜூலை 19

ஸ்ரீ காஞ்சி காமகோடி மூலம்நாயா சர்வஜ்ஞ பீடத்தின் 70வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் திருப்பூருக்கு வருகிற20ஆம்தேதிவிஜயம்செய்கிறார். இவர் பாலக்காட்டில் இருந்து சாலை மார்க்கமாக திருப்பூர் பல்லடம் ரோடு வாய்க்கால் தோட்டம் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீகாஞ்சி காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கு வருகை தருகிறார், இதுகுறித்து 24 மணி தெலுங்கு செட்டியார்கள் கல்யாண மண்டபம் அறக்கட்டளை, ,சுலோச்சனா குழுமம் தலைவர் எஸ். கிருஷ்ணகுமார் மற்றும் ராமகிருஷ்ண பஜனை மடம் திருப்பூர் கிளை நிர்வாகிகள் கூட்டாக ஷெரிஃப் காலனியில் உள்ள ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில் செய்தியாளர்களை சந்தித்தனர். வருகிற 20 ஆம் தேதி ஸ்ரீ காஞ்சி காமகோடி மூலம்நாயா சர்வஜ்ஞ பீடத்தின் 70வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் திருப்பூருக்கு விஜயம் செய்கிறார்.சுவாமிகள் பாலக்காட்டில் இருந்து சாலை மார்க்கமாக திருப்பூர் அருள்மிகு ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்திற்கு வருகை தருகிறார். ஆலயத்தில் பூர்ண கும்பம் மரியாதை வழங்கப்படுகிறது அன்று இரவு 8 மணி வரை பக்தர்களுக்கு அருளாசி வழங்குகிறார் அதனைத் தொடர்ந்து 21 ஆம் தேதி காலை எட்டு முப்பது மணிக்கும், காலை ஒன்பது முப்பது மணி முதல் 12 மணி வரை வேத பாராயணமும்நடைபெறும்நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார் அதனை தொடர்ந்து அன்று மாலை 6 மணிக்கு திருப்பூர் தொழில் துறையினருக்கு சுவாமிகள் அருளாசி வழங்குகின்றார் அதனைத் தொடர்ந்து வருகிற 22ஆம் தேதி காலை 8 மணி முதல் பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார் அன்று ஸ்ரீ லலிதா சகஸ்ர நாம மற்றும் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் நிகழ்ச்சியில் பங்கேற்று பக்தர்களுக்கு அருளாசி வழங்க உள்ளார்,பின்னர் அன்று மாலை இரண்டுமணிஅளவில்சேலம்புறப்பட்டு செல்கிறார்,

அதனைத் தொடர்ந்து வருகிற 26 ஆம் தேதி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் உலக அமைதி நல்ல மழை சுபிட்சம் ஆரோக்கியம் கல்வி முன்னேற்றம் குடும்ப நலன் மற்றும் பாரத தேசத்தின் ஆன்மீக உயர்வுக்காக மகா ருத்ர யாகம் 121 வேத விற்பன்னர்களால் 1331 முறை ஜெபிக்கப்பட்டு பூர்ணாகுதியும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் சன்னதியில் நடைபெற உள்ளது.

# உயர் கல்வி வாய்ப்புகளை மாணவர்கள் எளிதில் அடைய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு கூட்டம்




தஞ்சாவூர் ஜூலை 19

தஞ்சாவூரை அடுத்த திருமலை சமுத்திரத்தில் உள்ள சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைகழகத்தில் அனைவருக்கும் ஐஐடி (இந்திய தொழில்நுட்பக் கழகம்) மெட்ராஸ்திட்டத்தின்கீழ்பள்ளிதலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பு விழிப்பு ணர்வு கூட்டம் நடந்தது

அரசு மற்றும் கிராமப்புற மாணவர்களும் உலக புகழ்பெற்ற ஐஐடி மெட்ராஸ் கல்வியை எளிதில் அணுகக் கூடியதாக மாற்றும் நோக் கில் தமிழ்நாடு அரசு அனைவருக் கும் ஐஐடி மெட்ராஸ் திட்டத்தின் கீழ் இந்த கூட்டம் நடைபெற்றது

கூட்டம் ஐஐடி மெட்ராஸ் சமூக முன்னெடுப்புகள் தலைவரும்சமூக கல்வியாளரும் ஹரிகிருஷ்ணன் முன்னிலையில் ,கலெக்டர் ரேவதி தலைமையில் நடந்தது .இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு ,உதவி பெறும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு ஐஐடி மெட்ராஸ் வழங்கும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து விரிவாக எ டு த் து ரை க் க ப் ப ட் ட து

பின்னர் கலெக்டர் ரேவதி பேசும் போது

திட்டத்தின் மூலம் ஜெ இ இ நுழைவுத் தேர்வு இல்லாமல்ஐஐடி மெட்ராஸ் நடத்தும் தகுதி தேர்வி ன்அடிப்படையில் மாணவர்கள் பி எஸ் டிகிரி படிப்புகளில் சேரும் வாய்ப்பு உள்ளது. உலக தரம் வாய்ந்த பட்ட படிப்புகளை இணை ய வழியில் பயின்று நேரடியாக தேர்வுகள் மூலம் ஐஐடி மெட்ராஸ் பட்டம் பெற முடியும் 11ம்முடித்து 12 ஆம் வகுப்பிற்கு செல்லும் மாணவர்கள் கோடை விடுமுறையில் நடைபெறும் 4வது வார பயிற்சி பங்கேற்று தகுதி தேர்வு வெற்றி பெற்று சேர்க்கை பெறலாம் .12ம் வகுப்பு முடித்த பிறகு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களும் தங்களது கல்லூரி படிப்புடன் இணைத்து ஐஐடி மெட்ராஸ் பி எஸ் டிகிரி தொடரும் வசதி உள்ளது



# திருச்சி குறைதீர் கூட்டத்திற்கு மண்டை ஓடுகளுடன் வந்த விவசாயிகள்

## போலீசுடன் மோதல், தள்ளு முள்ளுவால் பரபரப்பு:

திருச்சி, ஜூலை 19

குறைதீர் கூட்டத்திற்கு மண்டை ஓடுகளுடன் வந்த விவசாயிகள்; போலீசுடன் மோதல், தள்ளு முள்ளுவால் பரபரப்புதிருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. இதில்மாவட்டஆட்சியர்பிரத்திக்தாயள்மற்றும்பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்பதற்காக தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு உள்ளிட்ட விவசாயிகள்கோரிக்கைமனுஅளிக்கவந்தனர்.அப்போது, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடாததால் குறுவை சாகுபடி செய்ய முடியவில்லை.

உச்ச நீதிமன்ற தீர்ப்புப்படி கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி கர்நாடகாவுக்குள் நுழைய முயற்சித்த விவசாயிகளை தமிழக காவல்துறை கைது செய்ததை கண்டித்தும், விவசாயிகளை மத்திய மாநில அரசுகள் கண்டுகொள்ளாததால் விவசாயிகள் செத்து மடிவதாக கூறி ஒரு சாக்கு முட்டையில் மனித மண்டை ஓடுகளை எடுத்து வந்தனர்.

அப்போதுநுழைவாயில்பகுதியில்நின்றுகொண்டிருந்த காவல்துறையினர்மண்டைஓட்டுடன்கூட்டஅரங்குக்குள் செல்ல தடை விதித்தனர். இதனால் விவசாயிகளுக்கும், காவல்துறையினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர்மண்டைஓட்டை வெளியே கொண்டு சென்றனர். பின்னர், திடீரென மண்டை ஓட்டுடன் கூட்ட அரங்குக்குள் ஓடிச்சென்று நுழைய முயன்றனர்.

அப்போதுகூட்டரங்கநுழைவுவாயில்கதவைபோலீசார் மூடி மண்டை ஓடு எடுத்துச் சென்றவரை துரத்திப் பிடித்தனர்.அதைத்தொடர்ந்துஅய்யாக்கண்ணுஉள்ளிட்ட விவசாயிகளுக்கும், காவல்துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு மற்றும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த சத்தத்தை கேட்டு ஆட்சியர் அலுவலக முதல் மாடியில் பணியாற்றி வந்த அலுவலக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அங்கு திரண்டனர். பின்னர் ஆட்சியர் மண்டை ஓட்டுடன் உள்ளே வர அனுமதி மறுத்ததை தொடர்ந்து மண்டை ஓட்டை விவசாயிகள் எடுத்துச் சென்றனர். அதன் பின்னர், அய்யாகண்ணு உள்ளிட்ட விவசாயிகள், தாங்கள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர். இந்த போராட்டத்தின் காரணமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

# குமரி 4 வழி சாலை திட்டத்தால் குளங்கள், சானல்கள் பாதிப்பு: புனரமைப்பு பணிகளை ஒரே நேரத்தில் முடிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு



கன்னியாகுமரி, ஜூலை 19

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக 4 வழி சாலை பணிகள் பல்வேறு காரணங்களால் மெதுவாக நடைபெற்று வருகிறது. இந்த பணியால் நூற்றுக்கணக்கான குளங்கள், கால்வாய்கள் அழியக்கூடிய சூழல் இருந்ததால், தேசிய பசுமை தீர்ப்பாயம் மற்றும் உயர்நீதிமன்றம்,உச்சநீதிமன்றம்ஆகியவைநீர்நிலைகளின் குறுக்கே பாலங்கள் மற்றும் கல்வெர்ட்டுகள் அமைத்துத் தான் சாலை அமைக்க வேண்டும் எனவும் மண் கொட்டி நீர்நிலைகளை மூடக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தது.

ஆனால், குமரி மாவட்டத்தை பொறுத்தவரை தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் இந்த உத்தரவுக்கு மாறாகபல்வேறுசானல்களைமுழுமையாகமண்கொட்டி மூடினர். தாறுமாறாக பணிகள் நடைபெற்று வந்தன.

எனவே நீர்நிலைகள் பாதிக்காமல் சாலை பணிகளை மேற்கொள்ளுமாறு பாசனத்துறை நிர்வாகிகள், குமரி விவசாயிகள் தேசிய அளவில் பிரச்சனையை எடுத்துச் சென்றனர். மேலும் குமரி பாசனத்துறை சேர்மன் வழக்கறிஞர் வின்ஸ் ஆன்றோ தலைமையிலான குழுவினர் குமரி மாவட்ட நீர்நிலைகளை பாதுகாக்க உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

பாசனத்துறை நிர்வாகிகள் சுட்டிக் காட்டியுள்ளவை உட்பட்ட நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகளும் உடனே நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி தாக்கல் செய்தார்.

மேலும் இந்த வருட இறுதிக்குள் நாற்கர சாலை திட்டப்பணிகள்முடியும்போது...ஒவ்வொருநீர்நிலையாக நீர்நிலைகளின்புனரமைப்புபணிகளும்சாலைபணியுடன் சேர்த்துஒருசேரநிறைவேற்றப்படுவதுடன்...நீர்நிலைகள் பழைய நிலைமைக்கு கொண்டுவரப்படும் என்று உறுதிமொழி அளித்தார்.

இதனை, பதிவு செய்துகொண்ட நீதிபதிகள் பலமுறை அதிகாரிகள் எழுத்துப்பூர்வமாக தந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற உத்தரவிட வேண்டும் என்ற வழக்குரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படியே தீர்ப்பளிக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

இதன்மூலம் குமரி மாவட்ட நீர்நிலைகள், நாற்கர சாலை திட்டத்திலிருந்து பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை குமரி மாவட்ட விவசாயிகளுக்கும், இயற்கை ஆர்வலர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.



# கன்னியாகுமரி நகராட்சி பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு

நாகர்கோவில், ஜூலை.19

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்ட பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் மதுசூதன் ரெட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் மு. பிரதாப் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக நேற்று காலை கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர். குறிப்பாக தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் கட்டப்பட்டு வரும் பொதுக்கழிப்பிடம், சுற்றுலாத்துறை மேம்பாட்டு நிதியில் கைப்பிடி அமைக்கப்பட்டுவரும் பணிகள், பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள், கடற்கரை அழகுப்படுத்தும் பணிகள் குறித்து திடீர் என நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து கன்னியாகுமரி திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதிகளை நேரில் பார்வையிட்டு அங்கு சுற்றுலா பயணிகளின் வருகை குறித்தும் அவர்களின் பாதுகாப்பு குறித்தும், சுற்றுலா தளங்களை மேம்படுத்துவது குறித்தும், சுற்றுலா பயணிகளைகவரும்வகையில்பூங்காவினை மேம்படுத்துவது குறித்தும், கழிப்பறை, குடிநீர்வசதி, குழியலறை உள்ளிட்டவை சுத்தமாகவும், சுகாதாரத்துடன் உள்ளதா எனவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடியாக செய்து முடித்திட பொறியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் அய்யன் திருவள்ளுவர் அவர்களை சுற்றுலா பயணிகள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வளைவுவினையும் அவ்வழியாக படகு சவாரிக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் சிரமமின்றி செல்வதற்கும் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பது குறித்தும், பல்நோக்கு வாகன நிறுத்துமிடம் அமைப்பது குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து அஞ்சுகிராமம் மற்றும் கோவளம் பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொ ண் டா ர் க ள் . நடைபெற்ற ஆய்வுகளில் நகராட்சி மண்டல இயக்குநர் நகைந்திரன், கன்னியாகுமரி நகராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், நகராட்சி ஆணையர் பட்டுசாமி, பொறியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# கோவை செம்மொழி பூங்காவில் 40 கோடி ஊழல்

## திமுக -காங்கிரஸ் பெண் கவுன்சிலர்கள் அடி தடி



கோவை ஜூலை :19

கோவை மாவட்டம் கோவை மாநகராட்சியில் மேயர் ரங்கநாயகி தலைமையில் மாநகராட்சி கமிஷனர் கட்டா ரவி தேஜா முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பெரும் திரளாக வந்திருந்த திமுகவைச் சேர்ந்த 73 கவுன்சிலர்களும் காங்கிரஸ் கட்சியின் ஐந்து கவுன்சிலர்களும் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மா.திமுக கட்சிகளை சேர்ந்த கமர்சியலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

விறுவிறுப்பாகநடைபெற்றமாமன்ற கூட்டத்தில் கடந்தமுறை நடைபெற்ற மாநகராட்சி கூட்டத்தில் முன்னாள் தமிழக முதல்வர்கள் மு.க. ஸ்டாலின் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி, ஆகியோர் புகைப்படங்களையும் வைக்க வேண்டும் என கடுமையாக வாதம் செய்தது அனைவருக்கும் தெரியும்,அதன் பொருட்டு மாநகராட்சி கூட்டம் நடைபெறும் அரங்கில் தற்போதைய முதலமைச்சர் விஜய் படம் மட்டுமல்லாமல் முன்னாள் தமிழக முதல்வர்கள் மு க ஸ்டாலின் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் படங்களும் வைக்கப்பட்டு இருந்தது.

மேலும் மாநகராட்சி கூட்டம் கவுன்சிலர்களின் காரசார வாக்குவாதத்துடன் துவங்கியது அப்போது திமுக மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கவுன்சிலர்களி டையே கடும் கோபத்துடன் விவாதித்ததால் அடிதடியாக மோதல் ஏற்பட்டது, அப்போது கோவை மாநகராட்சி 44 வது வார்டை சேர்ந்த காங்கிரஸ் கவுன்சிலர் காயத்ரி உரத்த குரலில் பேசிக்கொண்டே இருந்தார் மேலும் அவர் கூறுகையில் கோவையில் கட்டி முடிக்கப்பட்டு முன்னாள் முதல்வர் மு க ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்ட செம்மொழி பூங்கா அமைக்கும் பணியில் சுமார் 40 கோடி ரூபாய்க்கு மேலாக ஊழல் மற்றும் முறைகேடு நடை பெற்று இருப்பதாக குற்றம் சாட்டினார். இந்த குற்றச்சாட்டின்தொடர்பாகமேயர்ரங்கநாயகி மாநகராட்சி கமிஷனர் ஆகியோர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று மேயர் இருக்கையை நோக்கி பாய்ந்து சென்றார் காங்கிரஸ் கவுன்சிலர் காயத்ரி. அப்போது மாமன்றத்தில் இருந்த திமுக கவுன்சிலர்கள் காங்கிரஸ் கவுன்சிலர் காயத்ரியை சூழ்ந்து கொண்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதம் நடைபெற்று கொண்டிருக்கும்போதே காங்கிரஸ் கவுன்சிலர் காயத்திரியின் கை மற்றும் சேலையை பிடித்து இழுத்து தடுக்க முற்பட்டனர் திமுக கவுன்சிலர்கள். அப்போது திமுக கவுன்சிலர்களை அக்கம் பக்கம் உதறி தள்ளிவிட்டு மேயர் மற்றும் கமிஷனரிடம் விளக்கம் கேட்க எட்டி குதித்தார், அப்போது காங்கிரஸ் மற்றும் திமுக கவுன்சிலர் இடையே கடுமையான தள்ளுமுள்ளும் கைகலப்பும் ஏற்பட்டது. விடாது கருப்பு என்பது போல காங்கிரஸ் கவுன்சிலர் காயத்ரி சேலையை வரிந்து கட்டிக்கொண்டு தொடர்ந்து ஆக்ரோஷமாகவே மாநகராட்சி கூட்ட அரங்கில் கத்தினார். அப்போது காயத்ரிக்கு எதிராக கவுன்சிலர்கள் மீனா லோகு,சாந்தி முருகன் மற்றும் மாலதி ஆகியோர் கவுன்சிலர் காயத்திரியின் கையைப் பிடித்து இழுத்து சென்றனர். இதற்கிடையே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கவுன்சிலர்கள் சாந்தி,பிரபா, மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த ராமமூர்த்தி,பூபதி, ஆகியோர் தங்கள் வார்டுகளில் நடக்கும் பல்வேறுபிரச்சனைகளைமுன்னிறுத்தி மாமன்ற கூட்டத்தில் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் மாமன்ற கூட்டம் தொடர்ந்து நடைபெற காவலர்கள் பாதுகாப்பில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கோவை செம்மொழி பூங்கா அமைப்பதில் 40 கோடி ஊழல் நடந்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்ட இந்த நிகழ்வு முறைப்படி விசாரணைக்கு வருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.